**ரீனியூ 2024**

**நிகழ்ச்சி நிரல்**

- **நிறை அமர்வுகள் (பங்கேற்பாளர்கள் அனைவரும் பங்கேற்கும் அமர்வுகள்)**
- **பயிற்சிப்பட்டறைகள்**
- **வட்டமேசைகள்**
- **தளங்கள்**
- **களியாட்டங்கள் மற்றும் வேடிக்கை!**

ரீனியூ 2024 மாநாட்டின் அனைத்து நிறை அமர்வுகள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் செயற்பாடுகள் அனைத்து வடிவமைப்பிலும் பாலியல் தொழிலாளர்களே மையமாக அமைந்தனர், நிச்சயமாக இம்மாநாட்டின் காட்சி அடையாளம் மற்றும் இடம் என்பவற்றிலும் இது காணப்படுகின்றது. CREA அமைப்பின் நீண்ட கால கூட்டணி உறுப்பினரும் கிராபிக் வடிவமைப்பாளருமான ஷேர்னா தஸ்துர் மாநாட்டுக்காக வடிவமைத்த அனைத்து ஆவணங்களின் முகப்பு மற்றும் மையங்களில் பாலியல் தொழிலாளர்களின் குரல்கள் மற்றும் முகங்களை கொண்டு வந்துள்ளார். எமது ஒன்றுகூடல் உற்சாகமான பல்வேறுபட்ட மொழிகளைப் பேசும் மக்களை எமது முன்னெடுப்பு ஒன்றிணைப்பதால், தனது வடிவமைப்பில் பிராந்தியத்தின் சில மொழிகளையும் எடுத்துக் காட்டியுள்ளார்: எம்மைச் சூழ்ந்துள்ள பாலியல் தொழிலாளர்களின் வார்த்தைகள் ஆறு மொழிகளில் (பங்களா, ஹிந்தி, நேபாளி, தமிழ், சிங்களம் மற்றும் உருது) ஷர்மிளா பூஷானின் அணியினால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இன்னொரு CREA கூட்டணி உறுப்பினரான யாஷ் சந்திரா, தனது இடத்தின் வடிவமைப்பின் சாத்தியமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் பிளாஸ்டிக் மற்றும் ஏனைய செயற்கை பொருட்களுக்கு பதிலாக இயற்கை துணிகள் மற்றும் பொருட்களை தேர்வு செய்து தனது இட வடிவமைப்பு அணுகுமுறையில் பேண்தகு நிலையை சேர்த்துள்ளார். அர்ப்பணிப்பு மிக்க அனைத்து பெண்ணிலைவாதிகளுக்கும் நன்றிகள்!

## நிறை அமர்வுகள்

**ஒரு நிறை அமர்வு என்றால் என்ன?** ஒரு மாநாட்டின் (அல்லது ஒன்றுகூடலின்) போதான ஒரு நிறை அமர்வு என்பது வருகை தந்திருக்கும் அனைவரும் பங்கேற்கும் ஒரு அமர்வைக் குறிக்கின்றது. அங்கு காணப்படும் கருப்பொருட்கள் பரந்தனவாகவும் பல வகைப்பட்டனவாகவும் அமைந்திருக்கும். அக்கருப்பொருட்கள் அர்த்தபூர்வம் மிக்கனவாகவும் வருகை தந்திருக்கும் அனைவருக்கும் விருப்பை ஏற்படுத்தும் நோக்கத்தை கொண்டனவாகவும் காணப்படும்.

<u>மே 29: காலை நிறை அமர்வு (காலை 11:30 - மதியம் 01:00)</u>

**<u>ஆரம்ப நடன அளிக்கை</u>**
நேபாளத்தின் ஜகார்த்தி மஹா சங்ஹ் (JMMS) அமைப்பின் உறுப்பினர்களால் நடத்தப்படும். 2006 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட JMMS நேபாளத்தின் பெண் பாலியல் தொழிலாளர்களின் தேசிய வலையமைப்பு ஒன்றாகும். JMMS வலையமைப்பு பாலியல் தொழிலாளர்களின் உரிமைகள், தொழில்சார் பாதுகாப்பு, வன்முறை, HIV-AIDS முன் தடுப்பு அத்துடன் இனப்பெருக்க சுகாதார உரிமை பிரச்சினைகள் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றது.

**<u>வரவேற்புரை</u>**
CREA - Global அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கீதாஞ்சலி மிஸ்ரா மாநாட்டுக்கு பங்கேற்பாளர்களை வரவேற்பார்.

**<u>இந்த மாநாடு ஏன் நடைபெறுகின்றது?</u>**
பாலியல் தொழிலாளர்கள் மற்றும் கூட்டணிகள் ஆகிய இரண்டு தரப்புக்கும் இந்த தெற்காசிய மாநாடு ஏன் முக்கியமானது மற்றும் ஏன் இது உரிய நேரத்தில் கூட்டப்படுகின்றது என்பது தொடர்பில் பங்களாதேஸ், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த நான்கு பிரதிநிதிகள் தமது கண்ணோட்டங்களை பகிர்ந்து கொள்வர்.

**ஜோயா சிக்தேர், பங்களாதேஸ்**
ட்ரான்ஸ்ஜென்டர் மற்றும் பால்நிலை பல்வகைத்தன்மை மிக்க சமூகங்களின் உரிமைகளை உறுதி செய்ய பாடுபடும் ஒரு நிறுவனமான சொம்பூர்னா நிறுவனத்தின் உருவாக்குனர் மற்றும் தலைவி; பங்களாதேஸின் பாலியல் தொழிலாளர் வலையமைப்பின் முன்னாள் தலைவி.

**ஷோவா டங்கோல், நேபாளம்**
SWAN (பெண்கள் விழிப்புணர்வுக்கான சங்கம், நேபாளம்) எனவும் அறியப்படும் நாரி சேத்தனா சமாஜ் என்ற அமைப்பை பாலியல் தொழிலாளர்கள் 2007 ஆம் ஆண்டு ஷோவாவின் தலைமையில் பெண் பாலியல் தொழிலாளர்கள் பதிவு செய்தனர். இது அந்நாட்டில் பெண் பாலியல் தொழிலாளர்களின் தலைமையில் செயற்படும் முதலாவது பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக அமைந்தது.

**ஷாஹ்ஸாதி பிர்ஸாடோ, பாகிஸ்தான்**
ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்கு ஒரு இயலுமாக்கும் சூழலை உருவாக்க அத்துடன் அக்குழுக்கள் அடிப்படைச் சுகாதார சேவைகளை அணுகுவதற்கு உதவுவதற்காக ஷாஹ்ஸாதி சமூக அபிவிருத்தி நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் அத்துடன் அரச அமைப்புகளுடன் இணைந்து பணி புரிகின்றார்.

**இந்திராணி குசுமலதா, இலங்கை**
நகரப் பிரதேசங்கள் அல்லாத இடங்களில் பாலியல் தொழிலாளர்கள் அத்துடன் LGBT சமூகம் என்பவற்றுடன் இணைந்து பணி புரியும் சமூக அடிப்படையில் அமைந்த

நிறுவனமான பிரஜா திரிய பதனம என்ற நிறுவனத்தின் உற்சாகமான உறுப்பினராக குசுமலதா காணப்படுகின்றார்.

**<u>பாலியல் தொழிலாளர்களுக்கு செவிசாய்த்தல்</u>**

இந்த செம்மைப்படுத்தப்பட்ட திறந்த ஒலிவாங்கி அமர்வில், பங்களாதேஸ், இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த பாலியல் தொழிலாளர்கள் தமது போராட்டங்கள் மற்றும் தாங்குதிறன் தொடர்பான கதைகளை பகிர்ந்து கொள்வர்.

*இலகுபடுத்துனர் (மொடரேட்டர்):*
**நஸ்னி, இந்தியா**
இந்தியாவில் பெண்களால் நடத்தப்படும் ஒரேயொரு சுயாதீன கிராமியச் செய்தி அமைப்பான *கபர் லஹாரியா* வின் சிரேஷ்ட நிருபர்.

*பேச்சாளர்கள்:*
**பிஷாக்ஹா லஸ்கர், இந்தியா**
மேற்கு வங்காளத்தை தளமாகக் கொண்டு இயங்கும் பாலியல் தொழிலாளர்களின் ஒன்றிணைந்த அமைப்பான தர்பார் மஹிலா சமநவய குழுவின் செயலாளர்.

**இஸ்மத் அரா, பங்களாதேஸ்**
இவர் 2009 ஆம் ஆண்டு ரங்பூர் பிரதேசத்தில் பராஷ் நாரி உன்யன் சங்ஹ் என்ற சமூக அடிப்படையில் அமைந்த நிறுவனத்தை உருவாக்கியவர் ஆவார், அத்துடன் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் பெண்களின் உரிமைகள் தொடர்பான இயக்கங்களுடன் நெருங்கிய ஈடுபாடுகளைக் கொண்டுள்ளார்.

**கிரன் தேஷ்முக்ஹ், இந்தியா**
வேஷ்யா அன்யாய் முக்தி பரிஷத் (VAMP) என்ற பாலியல் தொழிலாளர்களின் ஒன்றிணைந்த அமைப்பின் உறுப்பினர்.

**லக்ஷ்மி ரானாபாஹ்த், நேபாளம்**
ஜக்ரிதி மஹிலா மஹா சங்ஹ் (JMMS) அமைப்பின் முன்னாள் தேசிய நிறைவேற்றுப் பணிப்பாளர்; கந்தாக்கி மாகாணத்தின் மாகாண பாலியல் தொழிலாளர் வலையமைப்பான கொரிட்டோ நேபாள் அமைப்பின் உருவாக்குனர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்.

**லில்லி அக்தர், பங்களாதேஸ்**
பங்களாதேஸின் பாலியல் தொழிலாளர் வலையமைப்பின் தலைவி; மேலும், பங்களாதேஸின் மனிக்கோஞ் மாவட்டத்தின் ஷாவ்னிர்வோர் மொஹிலா சங்ஸ்தா (SHOW) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர்.

**சுல்தானா பேகம், இந்தியா**
இந்தியாவின் ராஜஸ்தான் மானிலத்தின் அஜ்மீர் பிரதேசத்தில் இயங்கும் பாலியல் தொழிலாளர்களின் சமூக அடிப்படையில் அமைந்த நிறுவனமான சர்வோதய சமித்தியின் செயலாளர்.

**சகுனி மாயதுன்னே, இலங்கை**
ட்ரான்ஸ் பாலியல் தொழிலாளர்களின் ஒரு நிறுவனமான ட்ரான்ஸ் ஈக்குவாலிட்டி ட்ரஸ்ட் இன் உருவாக்குனர் மற்றும் பணிப்பாளர்.

**துளசி கந்ஹாரி, நேபாளம்**

ஜக்ரிதி மஹிலா மஹா சங்ஹ் (JMMS) அமைப்பின் தவிசாளர்; தனது சமூகத்தில் உள்ள பெண்களை வலுப்படுத்தும் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிக்க அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு நிறுவனமான எக்கிகிரித் மஹிலா சங்ஹ் நிறுவனத்தை உருவாக்கியவர்.

**S, பாகிஸ்தான்**
காஸி சமூக நல்வாழ்வு ஒன்றியத்துடன் பனிபுரியும் ஒரு சமூக உறுப்பினர்.

**F, பாகிஸ்தான்**
அக்டிவ் சுகாதார நிறுவனத்துடன் பணி புரியும் ஒரு சமூக உறுப்பினர்

**C, இலங்கை**
பெண் பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக பாடுபடும் ஒரு நிறுவனமான அபிமானி விமன்ஸ் கலக்டிவ் நிறுவனத்தின் தவிசாளர்.

<u>**செயற்பாட்டுக்கான அழைப்பு:** சுனிதா குஜூர், இந்தியா மற்றும் SWANSA</u>
தெற்காசியாவின் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் கூட்டணிகள் என்பன பின்தள்ளப்படுவதை முறியடிப்பதற்கு உலகளாவிய ஆதரித்து வாதிடல் மன்றங்களில் தோன்றுதல் அல்லது/அத்துடன் பொறிமுறைகளுடன் இணைந்து பணி புரிவது ஏன் முக்கியமானது என்பது பற்றிய ஒரு சுருக்கமான மேல்நோக்கை சுனிதா மற்றும் SWASA அமைப்பின் ஒரு உறுப்பினர் ஆகியோர் வழங்கவுள்ளனர். மேலதிகமாக, உலகளாவிய ஆதரித்து வாதிடல் நிகழ்ச்சி நிரலில் உள்ளூர் தரப்பு எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது தொடர்பிலும் அவர்கள் பேசவுள்ளனர்.

சுனிதா குஜூர் CREA அமைப்பின் ஆதரித்து வாதிடல் அறிவுரையாளர் ஆவார், அவர் தெற்காசியா, கிழக்கு ஆபிரிக்கா, மத்திய ஆசியா ஆகிய இடங்கள் அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை என்பவற்றில் பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளுடன் இணைந்த பிரச்சினைகள் தொடர்பில் பணிகளை மேற்கொண்டவர் ஆவார்.

<u>மே 29: மாலை நேர நிறை அமர்வு (மாலை 06:00 - 07:30)</u>

<u>**பொலிவூட்டில் பாலியல் தொழில்:** ஷோஹினி கோஹ்ஷ் வழங்கும் எடுத்துக்காட்டல்கள் கொண்ட உரை</u>
முன்னணி ஸ்கிரிப்ட் எழுத்தாளரான ஜாவேத் அக்தார் பொம்பே சினிமாவை இந்திய சினிமாவின் மிக நெருங்கிய அயலவர் என விபரித்தார். அது தனது "சொந்த பாரம்பரியங்கள், சொந்தக் குறியீடுகள், மற்றும் சொந்த மொழியைக் கொண்டுள்ளது". அவற்றுடன் பரிச்சியம் உள்ள அனைவராலும் அது புரிந்து கொள்ளப்படக் கூடியது எனவும் கூறினார். இந்த அளிக்கையானது பொம்பே சினிமாவின் துடிப்பான தவைஃப்கள் (திறன் மிக்க விலைமாதுகள்) மற்றும் பாலியல் தொழில் என்பவற்றை விளக்குகின்றது.

ஷோஹினி கோஹ்ஷ் AJK வெகுசன தொடர்பாடல் ஆய்வு மையத்தின் (MCRC) தவிசாளர் பேராசியரும் அத்துடன் புது டெல்லி ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தின் பிரேம்சந் ஆவணக்காப்பக மற்றும் எழுத்தறிவு நிலையத்தின் பணிப்பாளரும் ஆவார். கொல்கத்தாவின் பாலியல் தொழிலாளர் இயக்கம் பற்றி உருவாக்கப்பட்ட டேல்ஸ் ஒஃப் நைட் பெயாரீஸ் (2002) இயக்குனரும் அவராவார்.

மே 30: காலை நேர நிறை அமர்வு (காலை 11:30 - மதியம் 01:00)

**நடன நிகழ்ச்சி:** கோமல் கந்தார், தர்பார், சோனாகாச்சி, இந்தியா

தர்பார் மஹிலா சாமான்வயா குழுவின் கலாச்சார பிரிவில், மொழி, மதம் மற்றும் பிராந்தியத் தடைகளுக்கு அப்பால், யோசனைகளின் பகிர்தலை இலகுபடுத்தும் ஒரு தனித்துவம் மிக்க இயங்கு தளமாகவும் அத்துடன் பிராந்தியங்கள் மற்றும் நாடுகள் மத்தியில் பாலியல் தொழிலாளர்களின் ஒரு பொதுவான அடையாளத்தை ஏற்படுத்தும் விடயமாகவும் ஆதரித்து வாதிடல் செய்திகளை பகிரும் வழிமுறையாகவும் கோமல் கந்தார் உருவாகியுள்ளது.

**பாலியல் தொழிலை புகைப்படமாக்கல்:** அனிதா கெஹ்மேக்கா, இந்தியா, சபீனா கதிஹோக்கே உடனான உரையாடலுடன்

அனிதா கெஹ்மேக்கா தனது புகைப்படவியலை 1996 ஆம் ஆண்டு ஆரம்பித்தார். சமூக ரீதியாக ஓரங்கட்டப்பட்ட மற்றும் புறக்கணிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் சமூகங்களை அவர் நெருக்கமாக பின் தொடர்ந்தார் - கைவிடப்பட்ட விதவைகள், புத்திக்கூர்மை இயலாமை கொண்ட மக்கள், அடிமையானோர், HIV மற்றும் AIDS, அரசியல் சிறுபான்மைகள் அத்துடன் பாலியல் மற்றும் பால்நிலைச் சிறுபான்மைகளை அவர் பின் தொடர்ந்தார். அவரின் புகைப்படக் கண்காட்சிகள் பரந்த அளவில் இடம்பெற்றுள்ளன.

சபீனா கதிஹோக்கே புது டெல்லி ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தின் அன்வர் ஜமால் கித்வாய் வெகுசன தொடர்பாடல் ஆய்வு மையத்தின் காணொளி மற்றும் தொலக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு இணைப் பேராசிரியர் ஆகும். மேலும், அவர் ஆவணப்படத் தயாரிப்பாளர், கமரா நபர், புகைப்பட வரலாற்றாளர் மற்றும் தெரிவாளர் ஆகும்.

**செயற்பாட்டுக்கான அழைப்பு:** தெற்காசியாவின் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் கூட்டணிகள் (SWASA)

ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு எதிரான வன்முறை விசேட அறிக்கையாளரின் பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு எதிரான நிலைப்பாடு, அதனை ஏற்படுத்தும் காரணங்கள் அத்துடன் அதன் பின்விளைவுகள் தொடர்பில் தெற்காசியாவின் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் கூட்டணிகள் (SWASA) அமைப்பின் பிராந்திய இயங்கு தளத்தின் இரண்டு உறுப்பினர்கள் பேசவுள்ளனர். விசேட அறிக்கையாளரின் தீங்கு விளைவிக்கும் கதைகூறலை முறியடிக்க அவர்கள் மேற்கொள்ளும் ஒன்றிணைந்த ஆதரித்து வாதிடல் தொடர்பான ஆழ்ந்த விடயங்களை அவர்கள் சுருக்கமாக பகிரவுள்ளனர். மேலும், ஜூன் 2024 இல் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் பேரவை அமர்வுக்கு தயாராகும் வகையில் மாநாட்டில் உள்ள பாலியல் தொழிலாளர்கள் மற்றும் கூட்டணிகளிடம் அவர்கள் ஒருமைப்பாடு மற்றும் செயற்பாட்டுக்கான அழைப்பை விடுக்கவுள்ளனர்.

தெற்காசியாவின் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் கூட்டணிகள் (SWASA) அமைப்பு பங்களாதேஸ், இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள பாலியல் தொழிலாளர்கள் மற்றும் ஆதரவளிக்கும் செயற்பாட்டாளர்கள் மற்றும் நிறுவனங்கள் மத்தியிலான ஒரு ஒத்துழைப்பு முன்னெடுப்பாகும். இந்த முன்னெடுப்பு LGBTQI மற்றும் பெண்களின் உரிமைகள் தொடர்பில் பாடுபடும் நிறுவனங்கள் அத்துடன் ஏனைய ஓரங்கட்டப்பட்ட மக்களின் போராட்டங்களுடன் தானாகவே பொருந்துவதுடன் இப்பிராந்தியத்தில் உள்ள பாலியல் தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுவதிலும் கவனம் செலுத்துகின்றது.

மே 30: மாலை நேர நிறை அமர்வு (மாலை 04:30 - 07:30)

**படம் திரையிடப்படல்:** *ஸிந்தகி தமாஷா* (வாழ்வின் சேர்கஸ்), உருவாக்குனர் சர்மத் கூஹ்சாத், பாகிஸ்தான்
அதனைத் தொடர்ந்து, இந்தியாவின் ஷோஹினி கோஹ்ஷ் சர்மத் கூஹ்சாத் உடன் உரையாடலில் ஈடுபடுவார்.

சர்மத் சுல்தான் கூஹ்சாத் ஒரு இயக்குனர், நடிகர், தயாரிப்பாளர் மற்றும் திரைக்கதை எழுத்தாளர் ஆகும். *ஸிந்தகி தமாஷா* (2019) திரைப்படம் அகாடமி விருது வழங்கலில் பாகிஸ்தானில் இருந்து சிறந்த சர்வதேச திரைப்படத்துக்கான போட்டிக்காக பாகிஸ்தானால் அனுப்பப்பட்ட திரைப்படமாகும். மேலும் கூஹ்சாத் திரைப்படம் மற்றும் ஏனைய விடயதானங்களை கற்பிப்பவரும் ஆவார்.

மே 31: காலை நேர நிறை அமர்வு (காலை 11:30 - மதியம் 01:00)

**இலங்கையின் பிரஜா திரிய பதனமவின் அரங்க அளிக்கை நிகழ்ச்சி**
இலங்கையின் முரண்பாட்டின் இன மத பிரிவினைகளுக்கு அப்பால், பாலியல் தொழிலாளர்கள் உள்ளடங்கலாக ஓரங்கட்டப்பட்ட சமூகங்கள் மத்தியில் சமாதானம் மற்றும் சகவாழ்வை மேம்படுத்துவதில் பிரஜா திரிய பதனம அமைப்பு கவனம் செலுத்துகின்றது.

1. **கூட்டணியுறவுப் பயணங்கள்: பாலியல் தொழிலாளர்கள் மற்றும் கூட்டணிகளுடனான கேள்வி பதில்**

பெண்ணிலைவாத கூட்டணியுறவு, அது நடைமுறையில் எவ்வாறிருக்கும் அத்துடன் அவர்களின் இயக்க அடிப்படையில் அமைந்த பணியில் எழும் சவால்கள் போன்ற விடயங்களில் பாலியல் தொழில் செயற்பாட்டாளர்கள் மற்றும் கூட்டணிகளுடன் ஒரு ஊடாடல் மிக்க கலந்துரையாடல்.

*இலகுபடுத்துனர் (மொடரேட்டர்)*
**கீதாஞ்சலி மிஸ்ரா**

*நிபுணர் அணி*
**ஆவா, நேபாளம்**
பாலியல் தொழிலாளர் தலைமை வகிக்கும் ஒரு நிறுவனமான பக்தாபூரின் சங்கர்ஷா மஹிலா சமூகா அமைப்பின் தவிசாளர்; பெண் பாலியல் தொழிலாளர்களின் தேசிய வலையமைப்பின் (JMMS) ஒருங்கிணைப்பாளர்

**பிஷாக்ஹா தத்தா, இந்தியா**
திரைப்பட தயாரிப்பாளர், செயற்பாட்டாளர் மற்றும் முன்னாள் ஊடகவியலாளர்; பால்நிலை, பாலியல் மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பில் பணி புரியும் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பான இந்தியாவின் பொயின்ட் ஒஃப் வியூ அமைப்பின் இணை ஸ்தாபகர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்.

**மஹ்பூபா அக்தார் மஹ்மூத், பங்களாதேஸ்**
பங்களாதேஸின் ஒரு முன்னணி பெண்கள் செயற்பாட்டு நிறுவனமான நாரிபொக்ஹோ அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர்.

**நூர் புர்க்கான், பாகிஸ்தான்**
2019 ஆம் ஆண்டு கல்லூரியில் கற்கும் வேளை அவ்ரத் மார்ச் என்ற பாகிஸ்தான் முழுவதும் கிளைகளைக் கொண்ட பெண்ணிலைவாத ஒன்று திரட்டை நூர் ஒழுங்கமைத்தார்; குறைந்த வருமானம் பெண் வியாபாரிகளை வலுப்படுத்த அர்ப்பணிப்பு கொண்ட சேர்க்கில் விமன் என்ற நிறுவனத்தில் பணிபுரிகின்றார்.

**புதூல் சிங், இந்தியா**
இந்தியாவின் மேற்கு வங்காளத்தை தளமாகக் கொண்டு இயங்கும் பாலியல் தொழிலாளர் தலைமை தாங்கும் CBO அமைப்பான தர்பார் மஹிலா சமநவய குழுவின் உறுப்பினர்; அனைத்திந்திய பாலியல் தொழிலாளர் வலையமைப்பின் (AINSW) அடிப்படைக் குழு உறுப்பினர்.

**ரொஷான் டீ சில்வா, இலங்கை**
DAST அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர்; அபிமானி விமன்ஸ் கலக்டிவ் மற்றும் ட்ரான்ஸ் ஈக்குவாலிட்டி ட்ரஸ்ட் ஆகிய இரண்டு அமைப்புகளையும் உருவாக்க உதவியவர்; இலங்கையில் த ரெட் அம்ப்ரல்லா நெட்வேர்க் (பெண் பாலியல்

தொழிலாளர்களுடன்), HIV/TB CSO வலையமைப்பு அத்துடன் CARE கொன்சேர்ட்டியம் (LGBT சமூகத்துடன்) ஆகிய மூன்று கொன்சேர்ட்டியங்களை உருவாக்கியவர்.

**<u>பெண்ணிலைவாத கூட்டணியுறவு: கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்</u>**
*பேச்சாளர்:* ஶ்ரீலதா பட்லிவாலா, இந்தியா
2008 தொடக்கம் 2022 வரையான காலப்பகுதியில் CREA - பாலியல் தொழிலாளர் கூட்டணியுறவு சம்பவக் கற்கையை அடிப்படையாகக் கொண்டு *பெண்ணிலைவாத கூட்டணியுறவு - கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்* என்ற வெளியீட்டை ஶ்ரீலதா எழுதியுள்ளார். இந்த கருப்பொருளில் எழுதுவதற்கு அவருக்கு ஊக்கமளித்த விடயங்கள், சம்பவக் கற்கையை ஆவணப்படுத்திய தொடர் செயன்முறை, பெண்ணிலைவாத கூட்டணிகளை உருவாக்குதல் மற்றும் கட்டியெழுப்பல் என்பவற்றை சூழக் காணப்படும் சில முக்கிய கற்றல்கள், பெண்ணிலைவாத கூட்டணிகளை பேணுதல், அத்துடன் பதட்டங்கள் மற்றும் சவால்கள் மத்தியில் பயணித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஒரு காணொளிப் பதிவு மூலம் அவர் பகிர்ந்துகொள்ளவுள்ளார்.

பெண்ணிலைவாதி, புத்திஜீவி, மற்றும் பயிற்றுனரான ஶ்ரீலதா பட்லிவாலா CREA அமைப்பில் தற்போது அறிவைக் கட்டியெழுப்பல் தொடர்பான அறிவுரையாளராக பணியாற்றுகின்றார். நடைமுறையில் இருந்து அறிவைக் கட்டியெழுப்புவதில் அவரின் பணிகள் கவனம் செலுத்துகின்றன.

***<u>பெண்ணிலைவாத கூட்டணியுறவு - கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்</u>*** **<u>ஆவணத்தின் வெளியீடு</u>**
மாநாட்டின் போது பாலியல் தொழிலாளர் செயற்பாட்டாளர்கள் ஆவணத்தை முறைசார் வகையில் வெளியிடுவர்.

<u>மே 31: மாலை நேர நிறை அமர்வு (மாலை 06:00 - 07:30)</u>

**<u>நேபாளத்தின் ஷில்பீ அரங்கினால் நெறிப்படுத்தப்படும் பாலியல் தொழிலாளர் தலைமையில் இடம்பெறும் அரங்க நிகழ்ச்சி</u>**
கலை அளிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோரை ஷில்பீ அரங்கினால் அறிமுகம் செய்யப்படுவதுடன் கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்ற அவர்களின் பங்கேற்பு பயிற்சி பட்டறைகளின் விடயங்களையும் சுருக்கமாக பகிர்ந்து கொள்வர்.

நேபாளத்தில் சமூக அரசியல் நிலைமாற்றத்தை ஏற்படுத்துவதில் பங்களிக்கும் தொலைநோக்குடன் ஷில்பீ அரங்கக் குழு 2006 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அவர்கள் உள்ளூர் சமூகங்கள் மத்தியில் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளதுடன், உள்ளூர் அரங்கக் குழுக்களையும் உருவாக்கியுள்ளனர். மேலும், பல்வேறுபட்ட அரங்க நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ளனர்.

<u>**செயற்பாட்டின் வெளியீடு** - பூஜா பத்ரிநாத், செக்சுவல் ரைட்ஸ் இனிஷியேட்டிவ் மற்றும் SWASA</u>
SWASA கிராமம் மற்றும் ஆதரித்து வாதிடல் பயிற்சிப்பட்டறைகளில் இருந்து பெறப்பட்ட ஆழமான விடயங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஜூன் மாத அமர்வின் போது சமர்ப்பிக்கப்படவுள்ள ஆவணத்தின் வரைபுக்கு பங்களிக்க பாலியல் தொழிலாளர்கள் வழங்கிய செய்திகள், பங்கேற்பாளர்கள் (அவர்கள் விரும்பினால்) ஈடுபாட்டில் தொடர்ந்து இருக்க எத்தனை

கையொப்பங்கள் மற்றும் சாத்தியமான பின்தொடரல்கள் என்பன தொடர்பில் பூஜா மற்றும் SWASA அமைப்பின் இரண்டு உறுப்பினர்கள் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

பூஜா ஒரு சிரேஷ்ட ஆதரித்து வாதிடல் அறிவுரையாளர் ஆகும் - மனித உரிமைகள் பேரவை, செக்சுவல் ரைட்ஸ் இனிஷியேட்டிவ்.
இந்தியா, எகிப்து, ஆர்ஜென்டீனா போன்ற நாடுகளில் உள்ள தேசிய மற்றும் பிராந்திய நிறுவனங்களின் கூட்டமைப்பான செக்சுவல் ரைட்ஸ் இனிஷியேட்டிவ் என்ற அமைப்பு. ஐக்கிய நாடுகள் சபையில் பாலியல் தொடர்பான மனித உரிமைகளை முன்கொண்டு செல்ல இவ்வமைப்பு ஒன்றிணைந்து பாடுபடுகின்றது.

தெற்காசியாவின் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் கூட்டணிகள் (SWASA) என்பது பங்களாதேஸ், இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கையில் உள்ள பாலியல் தொழிலாளர்கள், ஆதரவு செயற்பாட்டாளர்கள் மற்றும் நிறுவனங்களின் இடையான ஒரு ஒத்துழைப்பு முயற்சியாகும். இந்த முன்னெடுப்பு தானாகவே LGBTQI மற்றும் பெண்கள் உரிமைகள் இயக்கங்கள் அத்துடன் ஓரங்கட்டப்பட்ட மக்களின் ஏனைய போராட்டங்களுடன் ஒத்திசைவானதாக அமைகின்றது அத்துடன் பிராந்தியத்தில் உள்ள பாலியல் தொழிலாளர்களின் மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது.

**CREA அமைப்பினால் நிறைவு செய்யப்படல்**

## பயிற்சிப்பட்டறைகள்

**ஒரு பயிற்சிப்பட்டறை என்றால் என்ன?** மிகவும் எளிமையாகக் கூறுவதாயின், ஒரு பயிற்சிப்பட்டறை என்பது ஒரு பிரச்சினை அல்லது தலைப்பை மிகவும் நெருக்கமாக சோதனை செய்வதற்கு மற்றும் செயற்பாட்டுக்கான வழிப்பாதைகளை அடையாளம் காண்பதற்காக ஒரு மக்கள் குழு சந்திக்கும் நிகழ்வாகும். ஒரு வட்டமேசைக்கு மாற்றமாக, பயிற்சிப்பட்டறையில் ஒரு தீவிரமான கற்றல் எட்டப்படுகின்றது, அது கலந்துரையாடப்படும் பிரச்சினையை தீர்க்க உறுதியான மற்றும் நடைமுறைச் சாத்தியம் மிக்க முறைகளை உருவாக்க உதவுகின்றது.

மாநாட்டின் போது, ஒரு தனித்துவம் மிக்க கருப்பொருளில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும் ஆழமான கற்றலை அடையவும் வாய்ப்புகளை வழங்கும் வகையில் மூன்று நிர்வகிக்கப்படும் பயிற்சிப்பட்டறைகள் வழங்கப்படவுள்ளன. மூன்று பயிற்சிப் பட்டறைகளும் ஒரே நேரத்தில் நடத்தப்படவுள்ளன, அவை தினம் 1 மற்றும் தினம் 3 ஆகிய இரு தினங்களில் வழங்கப்படும், எனவே பங்கேற்பாளர்கள் தமது விருப்பின் அடிப்படையில் இரண்டு பயிற்சிப் பட்டறைகளில் பங்கேற்க முடியும்.

**<u>உடனிருத்தல் நடைமுறைகள் பற்றி: பாலியல் தொழிலாளர்களும் அவர்களின் கூட்டணிகளும்</u>**

*<u>இது எதைப் பற்றியது:</u>* பாலியல் தொழிலாளர் உரிமை இயக்கங்கள் மற்றும் அவர்களின் கூட்டணிகள் இடையான நெருக்கமான உறவு பல உடனிருத்தல் நடைமுறைகளுக்கு வழிவகுத்துள்ளது (இந்தப் பதம் ஒரு நிறுவனம் தனது கூட்டணி உறுப்பினருக்கு வழங்கும் நடைமுறை வழிகாட்டல் மற்றும் உதவியை குறிக்க பயன்படுத்தப்படுகின்றது). வழமையாக தீவிர போட்டிக்கு மத்தியில் காணப்படும் அவை, அதிகாரம் மற்றும் வளங்களின் சமநிலையற்ற தன்மைகளை அங்கீகரிக்கும் உடனிருத்தலின் அதிக நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் நடைமுறைகளை உருவாக்க உதவின. இந்தப் பங்கேற்பு முறையில் அமைந்த பயிற்சிப்பட்டறை, இந்தப் பிராந்தியத்தில் உள்ள பங்கேற்பாளர்களின் அறிவு மற்றும் அனுபவங்களை பயன்படுத்தி இன்னும் அதிக அர்த்தபூர்வமான உடனிருத்தல் நடைமுறைகளை வடிவமைக்கவும் வெளிப்படுத்தவும் உதவும்.

*எதனை எதிர்பார்ப்பது:* பாலியல் தொழிலாளர்களின் அனுபவங்களின் அடிப்படையில் பல உடனிருத்தல் நடைமுறைகளை விளங்கிக் கொள்ளும் வகையில் காட்சி மூல வரைபடமாக்கல் செயன்முறையுடன் இந்தப் பயிற்சிப் பட்டறை ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து, நேர்மறையான மற்றும் எதிர்மறையான அனுபவங்கள் ஆகிய இரண்டையும் வெளிக்கொணரும் வகையில் ஒரு சிறிய குழுக்கலந்துரையாடல் இடம்பெறும். வகிபாகமேற்று நடித்தல் மற்றும் ஏனைய புத்தாக்கம் மிக்க கருவிகளும் பயன்படுத்தப்படவுள்ளன, அதன் பின்னர் நேர்மறையான நடவடிக்கைகளை வடிவமைக்க முக்கிய கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகளை பெற ஒரு வழிகாட்டப்பட்ட தொடர் செயன்முறை முன்னெடுக்கப்படும்.

*நடத்துபவர்:* சொலிடாரிட்டி பவுன்டேசன், இந்தியா. இந்த நிறுவனம் அமைப்பு ரீதியான வலுப்படுத்தல், தலைமைத்துவத்தை கட்டியெழுப்பல், வாழ்வாதார மற்றும் நல்வாழ்வு முன்னெடுப்புகள் மூலம் பாலியல் தொழிலாளர்கள், அத்துடன் பால்நிலை மற்றும் பாலியல் சிறுபான்மைகளுக்கு ஆதரவளிக்கின்றது. (https://www.solidarityfoundation.in/)

*இடம்:* பன்யான் மண்டபம்

**பாதுகாப்பாக இருத்தல்: நிகழ்நிலை பாலியல் தொழிலாளர்களுக்கான உரிமைகள் மற்றும் பாதுகாப்பு**

*இது எதைப் பற்றியது:* பாலியல் தொழிலாளர்களின், விசேடமாக தெற்காசிய சூழமைவில் அவர்களின் தனித்துவம் மிக்க சமூக, அரசியல், சட்ட ரீதியான மற்றும் பாதுகாப்பு தடைகளுக்கு மத்தியில் தொழில்நுட்பம் எவ்வாறு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றது என்பது பற்றிய போதிய புரிதல் இல்லாத நிலை காணப்படுகின்றது. பாலியல் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் கூட்டணிகளுடன் நடத்தப்படும் இந்த இணைந்து கற்கும் பயிற்சிப்பட்டறை பாலியல் தொழிலாளர்களின் வாழ்வுடன் தொழில் நுட்பம் எவ்வாறு துறைகளை இணைத்துக் காணப்படுகின்றது அத்துடன் அது அவர்களின் தேவைக்கு ஏற்றவாறு எவ்வாறு சிறப்பாக வடிவமைக்கப்பட முடியும் என்பன போன்ற விடயங்களை இப்பயிற்சிப்பட்டறை ஆராய்கின்றது.

*எதனை எதிர்பார்ப்பது:* இந்தப் பயிற்சிப்பட்டறை பாலியல் தொழிலாளர்கள் எவ்வாறு டிஜிட்டல் உலகுடன் ஊடாடல்களை மேற்கொள்கின்றனர், அதன் பயன் தரும் தன்மை அத்துடன் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்பன போன்ற விடயங்களைச் சூழ பங்கேற்பு முறையில் பிரச்சினையின் பரப்பு எல்லையை அமைப்பதுடன் ஆரம்பமாகும்.

டிஜிட்டல் உரிமைகள், அத்துடன் சட்ட ரீதியான / ஒழுங்கமைப்பு ரீதியான சட்டக வடிவமைப்புகள் பற்றிய சுருக்கமான கலந்துரையாடல் ஒன்றின் பின்னர், டிஜிட்டல் பாதுகாப்புக்கான மூலோபாயங்கள் பயிற்சிப் பட்டறை நடத்துனரால் பகிர்ந்து கொள்ளப்படும். அவர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்யும் விதத்தில் இணையத்தில் காணப்படும் ஒரு மிகச் சிறந்த இயங்குதளம் / இடம் எவ்வாறு அமைந்திருக்கும் என ஒரு விஞ்ஞாபணம் எழுதும் பயிற்சியுடன் பயிற்சிப்பட்டறை நிறைவு பெறும்.

*நடத்துபவர்:* உலகளாவிய தெற்கில் தொழில்நுட்பம் மற்றும் சமுதாயம் என்பவற்றின் இடையே காணப்படும் சிக்கல் தன்மை மிக்க ஊடாடல்களை ஆராயும் இந்தியாவின் டிஜிட்டல் ஃபியூச்சர் லாப் என்ற பல்துறை ஆய்வு வலையமைப்பு. சான்றுகளின் அடிப்படையில் அமைந்த ஆய்வு, பங்கேற்பு தூர நோக்குப் பார்வை அத்துடன் பொதுமக்கள் ஈடுபாடு என்பவற்றின் ஊடாக, இவ்வலையமைப்பு விகிதப் பங்கு மிக்க, பாதுகாப்பான மற்றும் கவனம் மிக்க எதிர்காலங்களுக்கான பாதையை அடையாளம் காண்கின்றது. (https://digitalfutureslab.in/)

*இடம்:* ஷிவாபூரி மண்டபம்

**UNHRC இல் தீங்கு விளைவிக்கும் யோசனைகளை முறியடித்தல்: ஒரு நடைமுறைக் கருவி**

*இது எதைப் பற்றியது:* ஐக்கிய நாடுகளை சபையின் மனித உரிமைகள் பேரவையின் 56 ஆவது அமர்வு ஜூன் 18 தொடக்கம் ஜூலை 12, 2024 வரை நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறை பற்றிய விசேட அறிக்கையாளரான ரீம் அல்சலேம், இந்த அமர்வின் போது தனது அறிக்கையை "விபச்சாரம் அத்துடன் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு எதிரான வன்முறை" என்ற தலைப்பில் அளிக்கை செய்யவுள்ளார். அவரின் முந்தைய கூற்றுக்கள், சமூக ஊடகக் கூற்றுக்கள், உள்ளீடுகளுக்கான அழைப்பு அத்துடன் இந்த அறிக்கைக்கு தகவல் பெற நடத்தப்பட்ட பிராந்திய ஆலோசனைகள் என்பவற்றின் அடிப்படையில், குறித்த அறிக்கை பாலியல் தொழிலுக்கு எதிரானது என நம்பப்படுகிறது.

ஏனைய விசேட நடைமுறைகள் கொண்டுள்ள விருப்பை பயன்படுத்துதல் உள்ளடங்கலாக, வேறுபட்ட மட்டங்களில் காணப்படும் கதைகூறல்களை முறியடிக்கும் மூலோபாயங்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றை முன்கொண்டு செல்ல பயிற்சிப்பட்டறை இந்த விடயத்தை பயன்படுத்தவுள்ளது. மிகவும் குறிப்பாக, மனித உரிமைகள் பேரவையில் அளிக்கை செய்வதற்கான ஒரு கூற்று எவ்வாறு வரையப்பட முடியும் அத்துடன் அந்த மட்டுப்படுத்தப்பட்ட தளத்தை முக்கிய கரிசனைகளை சுட்டிக்காட்ட எவ்வாறு பயன்படுத்துவது அத்துடன் அந்த கூற்றை வழங்குவதன் சாத்தியமான பெறுமதி போன்ற விடயங்களை பயிற்சிப்பட்டறை சுட்டிக்காட்டும்.

*எதனை எதிர்பார்ப்பது:* ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான விசேட அறிக்கையாளரின் ஈடுபாட்டை கலந்துரையாட பங்கேற்பாளர்களால் இயலுமாக இருக்கும்: அவரின் அறிக்கை, ஏற்படுத்தும் தாக்கம், தேசிய மட்டத்தில் ஏற்பட சாத்தியமான தீங்கு, அத்துடன் அவரின் ஆதரித்து வாதிடலை ஒன்றிணைந்து எவ்வாறு எதிர்ப்பது மற்றும் முறியடிப்பது. UNHRC அமர்வின் போதும் அதன் பின்னரும் ஆதரித்து வாதிடலை மேற்கொள்ள பயன்படுத்த முடியுமான முக்கியமான செய்திகளைக் கொண்ட ஆவணத்தின் புறவுருவை உருவாக்குவதை இந்தப் பயிற்சிப்பட்டறை இலக்காகக் கொண்டிருக்கும்.

*நடத்துபவர்:* கனடா, இந்தியா, எகிப்து, ஆர்ஜென்டீனா போன்ற நாடுகளில் உள்ள தேசிய மற்றும் பிராந்திய நிறுவனங்களின் கூட்டமைப்பான செக்சுவல் ரைட்ஸ் இனிஷியேட்டிவ் என்ற அமைப்பு. ஐக்கிய நாடுகள் சபையில் பாலியல் தொடர்பான மனித உரிமைகளை முன்கொண்டு செல்ல இவ்வமைப்பு ஒன்றிணைந்து பாடுபடுகின்றது. (https://www.sexualrightsinitiative.org/)

*இடம்:* கைலாஷ் மண்டபம்

## வட்டமேசைகள்

**ஒரு வட்டமேசை என்றால் என்ன?** ஒரு வட்டமேசை என்பது தனித்துவம் மிக்க கருப்பொருளில் ஒரு குழுவுடன் நடத்தப்படும் ஒரு இலகுபடுத்தப்பட்ட உரையாடல் ஆகும் - வழமையாக சுற்றிவர நடத்தப்படும், ஆம், அது அதிகார படிநிலைகள் அற்ற ஒரு 'வட்ட மேசை' ஆகும். ரீனியூ மாநாட்டின் வட்டமேசைக் கலந்துரையாடல்களுக்கான கருப்பொருட்கள் பிராந்தியத்தில் உள்ள பாலியல் தொழிலாளர்கள் மற்றும் கூட்டணி உறுப்பினர்களுடன் மேற்கொள்ளப்பட்ட விபரமான கலந்துரையாடல்களில் இருந்து பெறப்பட்டன. இந்த உரையாடல்களில் கருதுகோள் ரீதியான மற்றும் அனுபவ அறிவு மற்றும் தகவல்கள் உள்ளடங்கவுள்ளன, அவை அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் துறைகளுக்கு இடையான கற்றலை பெறுவதற்கான ஒரு வாய்ப்பை வழங்கும். தெரிவு செய்யப்பட்ட பங்கேற்பாளர்கள் உரையாடலை ஆரம்பம் செய்ய உதவுவர்.

**வட்டமேசை 1: மிக மிகப் பரந்த முறைசாரா பணியின் உலகு**

முறைசாரா துறையில் பணிபுரியும் பெண்கள் 'மாறிச் செல்லும்' தொழிலாளர் அடையாளங்களைக் கொண்டுள்ளனர் - ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், தொழிற்சாலை தொழிலாளர்கள், பாலியல் தொழிலாளர்கள்.... எனினும் முறைசாரா துறையில் கொடுக்கல் வாங்கல் பாலியலில் ஈடுபடும் பெண்கள் அனைவரும் பாலியல் தொழிலாளர்களாக அடையாளம் காணப்படுவதில்லை. பாலியல் தொழிலாளர்கள் பற்றி நிலவும் மாறாநிலைப் படிமங்களை சவாலுக்கு உட்படுத்தும் ஒரு அமர்வில் இந்த மர்மம் ஆராயப்படவுள்ளது. பரந்த முறைசாரா பொருளாதாரத்தின் ஒரு அங்கமாகவும் பெண்களுக்கான பல வாழ்வாதாரத் தெரிவுகளில் ஒன்றாகவும் பாலியல் தொழிலை நிலைப்படுத்த இது உதவும்.

*இடம்:* கைலாஷ் மண்டபம்

*இலகுபடுத்துனர்:*

**ஆஷிலா தந்தெனிய, இலங்கை**

இலங்கையில் காணப்படும் மேலிருந்து கீழான அதிகாரப் படிநிலை கொண்ட அத்துடன் ஆண்களின் ஆதிக்கம் மிக்க தொழிற்சங்க இயக்கங்களுக்கு ஒரு மாற்றீடாக பெண்களின் தலைமைத்துவத்தின் கீழ் 'ஸ்டான்ட்-அப்' தொழிலாளர் இயக்கத்தை உருவாக்கிய முன்னை நாள் தொழிற்சாலை தொழிலாளர்.

*பேச்சாளர்கள்:*

**மீரா ராகவேந்திரா, இந்தியா**

இந்தியாவின் தெலுங்கானா மற்றும் ஆந்திரா பிரதேஷ் ஆகிய இடங்களில் உள்ள என்ற பாலியல் தொழிலாளர் தலைமை தாங்கும் சமூக அடிப்படையில் அமைந்த நிறுவனங்களின் வலையமைப்பான *மீ அன்ட் மை வேர்ல்ட்* இற்கு ஆதரவளிக்கும் விமன் இனிஷியேட்டிவ்ஸ் (WINS) அமைப்பின் ஸ்தாபகர்.

**K. ரத்னகுமாரி, இந்தியா**

ஆந்திர பிரதேஷில் உள்ள ஒரு பாலியல் தொழிலாளர்கள் தலைமை தாங்கும் சமூக அடிப்படையில் அமைந்த நிறுவனமான தாரணி அமைப்பின் தலைவர். இந்த நிறுவனம் *மீ அன்ட் மை வேர்ல்ட்* வலையமைப்பின் ஒரு அங்கமாகவும் பாலியல் தொழிலாளர்களின் தேசிய வலையமைப்பின் (NNSW) ஒரு உறுப்பினராகவும் உள்ளது.

**பிமலா மல்லா தாக்கூரி, நேபாளம்**

பாலியல் தொழிலாளர் செயற்பாட்டாளர், மஹிலா சஹயோகி சமுஹா அமைப்பின் ஸ்தாபகர், அத்துடன் பாலியல் தொழிலாளர்கள் தலைமை தாங்கும் 33 நிறுவனங்களின் கூட்டமைப்பான ஜக்ரிதி மஹிலா மஹா சங்ஹ் அமைப்பின் முன்னாள் தலைவி.

**பபிதா பரல், நேபாளம்**
வேலை செய்வதற்கான உரிமையில் கவனம் செலுத்தும் அத்துடன் நேபாளத்தில் உள்ள பாலியல் தொழிலாளர்களுடன் உறுதியான கூட்டணியுறவைக் கொண்ட பெண்ணிலைவாத நிறுவனமான தரங்கினி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்.

**சாமிலா துஷாரி, இலங்கை**
இலங்கையில் பெண் தொழிலாளர்களை ஒன்று திரட்டுவதன் மூலம் சுதந்திர வர்த்தக வலயத்தில் (FTZ) பெண் தொழிலாளர்களின் உரிமைகளை மேம்படுத்தும் தபிந்து கலக்டிவ் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர்.

**ஸ்ரீஜனா பன், நேபாளம்**
நேபாளத்தின் மகிழ்வூட்டல் துறையில் பணிபுரியும் பெண்களின் உரிமைகளை உறுதி செய்ய பணியினை மேற்கொள்ளும் முதல் அரச சார்பற்ற நிறுவனமான விமன் ஃபோரம் ஃபோர் விமன் இன் நேபாள் (WOFOWON) அமைப்பின் ஸ்தாபகர்.

**<u>வட்டமேசை 2: உரிமைகள், புனர்வாழ்வு அல்ல</u>**
தன்னார்வம் மிக்க, ஒப்புதலுடனான அத்துடன் வளர்ந்தோர் பாலியலில் தொழிலில் ஈடுபடும் பெண்கள் வழமையாக 'பாதிக்கப்பட்டவர்கள்' அல்லது 'குற்றவாளிகள்' என வகை குறிக்கப்படுவதுடன் தொடர்ச்சியாக தீவிரமான உரிமை மீறல்களையும் எதிர்கொள்கின்றனர். பொலிசாரின் தேடுதல் நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் அவர்கள் தடுத்து வைத்தல் இல்லங்களுக்கு அனுப்பப்படுகின்றனர் அத்துடன் இந்த 'புனர்வாழ்வு' அவர்கள் மீது திணிக்கப்படுகின்றது. சில நாடுகளில், பாலியல் தொழில் குற்றமாக்கப்படாத போதும், அவர்களின் வேலையின் அம்சங்கள் (சமூகமயமாதல், ஒரு விபச்சார விடுதியை நடத்துதல் அல்லது/அத்துடன் பாலியல் தொழிலுக்காக இடத்தினை வாடகைக்கு அமர்த்துதல் போன்றன) தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களாக ஆக்கப்பட்டுள்ளன. இந்த அமர்வில் இடம்பெறும் வட்டமேசையில் இந்த பிரச்சினைகள் மற்றும் இவற்றை சவாலுக்கு உட்படுத்த பாலியல் தொழிலாளர்கள் மற்றும் கூட்டணிகளால் பயன்படுத்தப்படும் மூலோபாயங்கள் ஆகியன கருத்திற் கொள்ளப்படவுள்ளன.

*இடம்:* காஷ்தாமண்டப் மண்டபம்

*இலகுபடுத்துனர்:*
**ஃபறூக் ஃபைசல், பங்களாதேஸ்**
ஐன் ஓ சாலிஷ் கேந்ரா (ASK) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர், ஒரு சட்ட உதவி மற்றும் மனித உரிமைகள் நிறுவனமான ASK, பங்களாதேஸின் பெண்கள் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் நிறுவனங்களின் கூட்டமைப்பான ஷோனோக்ஹோத்தி அமைப்பின் நிறைவேற்றுக் குழுவின் ஒரு உறுப்பினராகும்.

*பேச்சாளர்கள்:*

**இந்திராணி குசுமலதா, இலங்கை**

**ஃபரிதா பர்வீன், பங்களாதேஸ்**

பங்களாதேஸின் ஃபரீதாபூர் மற்றும் ராஜ்பாரி ஆகிய இடங்களில் உள்ள விபச்சார விடுதிகளில் இருந்து பாலியல் தொழிலாளர்களை பலவந்தமாக வெளியேற்றியமைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் முன்னணி வகிபாகம் ஒன்றைக் கொண்டிருந்த பங்களாதேஸின் பாலியல் தொழிலாளர் வலையமப்பின் (SWNOB) ஒரு உறுப்பினர் இவராகும்.

**கீதா தேவி பவ்டேல், நேபாளம்**

25 மாவட்டங்களில் பாலியல் தொழிலாளர்கள் தலைமை தாங்கும் 33 நிறுவனங்களின் கூட்டமைப்பான ஜக்ரிதி மஹிலா மஹா சங்ஹ் (JMMS) அமைப்பின் இணைச் செயலாளர், அத்துடன் JMMS அமைப்பின் இணைந்த அமைப்பான மஹிலா ஷாஸ்க்திகரன் நிறுவனத்தின் செயலாளர்.

**C, இலங்கை**

**ரொஷான் டி சில்வா, இலங்கை**

**கிரன் தேஷ்முக்ஹ், இந்தியா**

**<u>வட்டமேசை 3: புதிய அறைகள், புதிய இயக்கவியல்: நிகழ்நிலை உலகில் பாலியல் தொழில்</u>**

தொழில்நுட்பம் (மொபைல் ஃபோன்கள்) மற்றும் நிகழ்நிலை தளங்களை (சமூக ஊடகம்) பயன்படுத்தி நபர்கள் எவ்வாறு ஆபத்தான, குற்றமாக்கப்பட்ட - பாலியல் தொழில் போன்ற - தொழில்களில் ஈடுபடுகின்றனர்? கோருதலின் பாரம்பரிய வடிவங்கள் நிலைமாற்றம் அடைந்து வருகின்றன. இவ்வாறான மாற்றங்களுக்கு மத்தியில், பாலியல் தொழிலாளர்கள் - சேவை வழங்குனர்களாக, உள்ளடக்க உருவாக்குனர்களாக அத்துடன் தொழில்முனைவாளர்களாக - தமது அடையாளங்களை மீள் வரையறை செய்து வருகின்றனர். இவ்வாறு மாற்றமடைந்து வரும் இயக்கவியல் பாலியல் தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் நல்வாழ்வு என்பவற்றில் விளைவுகளைக் கொண்டிருப்பது மாத்திரமன்றி பாலியல் தொழிலாளர்களுடனான இடையீடுகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன அத்துடன் அமுல்படுத்தப்படுகின்றன என்பதிலும் செல்வாக்கு செலுத்துகின்றது.

*இடம்:* நாலந்தா மண்டபம்

*இலகுபடுத்துனர்:*
**பிஷ்க்ஹா தத்தா, இந்தியா**
திரைப்பட தயாரிப்பாளர், செயற்பாட்டாளர் மற்றும் முன்னாள் ஊடகவியலாளர், அதே போன்று இந்தியாவின் பொயின்ட் ஒஃப் வியூ அமைப்பின் இணை ஸ்தாபகர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்.

*பேச்சாளர்கள்:*
**நிபேதிதா சர்க்கார், பங்களாதேஸ்**
பங்களாதேஸின் BRAC பல்கலைக்கழகத்தின் BRAC ஜேம்ஸ் P பொதுச் சுகாதாரத்துக்கான கிரான்ட் ஸ்கூலின் உதவி ஆய்வு ஒருங்கிணைப்பாளர். பெண் பாலியல் தொழிலாளர்களுடன் BRAC தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இவர் பங்கேற்றுள்ளார்.

**குசும், இந்தியா**

பாலியல் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் சமூக உரித்துக்கு கொண்டுள்ள உரிமைகளை முன்கொண்டு செல்லும் அஸாத் டிட்லியான் கலக்டிவ் முன்னணி நபராக இவர் உள்ளார்; முன்னர் இவர் அனைத்திந்திய பாலியல் தொழிலாளர் வலையமைப்புடன் இணைந்திருந்த இவர் அவ்வலையமைப்பின் முன்னாள் தலைவருமாவார்.

**வனமாலி கவ்சல்யா கலப்பதி, இலங்கை**
அடையாளம், உள்வாங்கல் மற்றும் பால்நிலை தொடர்பில் செயற்படும் விமன் மீடியா கலக்டிவ் அமைப்புடன் இவர் இணைந்துள்ளார்; முன்னர், இனங்களுக்கு இடையான நீதி மற்றும் சமத்துவத்துக்கான இயக்கத்துடன் (MIRJE) இவர் பணிபுரிந்துள்ளார்.

**நுபூர் அஃப்ரின், பங்களாதேஸ்**
வீதி மற்றும் வீட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு பாலியல் தொழிலாளர்; பங்களாதேஸின் பாலியல் தொழிலாளர் வலையமைப்பு மற்றும் பங்களாதேஸின் டாக்கா நகரின் ஷோனோ நாரி யூனியன் ஷொங்ஹோ அமைப்பு என்பவற்றின் உறுப்பினருமாவார்.

**மிஷாரி வீரவங்ச, இலங்கை**
குயீர் பெண்ணிலைவாதி, தற்போது டிலீட் நத்திங் அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட இணை முன்னணி நபராக பணி புரிந்து வருகின்றார்.

**<u>வட்டமேசை 4: சட்டம் மற்றும் சமூக இயக்கங்கள்: உதவிக்கு அதனைப் பெற்றுக்கொள்ளல்</u>**
**விபரிப்பு:** சட்டம் மற்றும் கொள்கை ஆதரித்து வாதிடல் அனுபவங்கள் அத்துடன் வேறுபட்ட சூழமைவுகளில் பாலியல் தொழிலாளர் உரிமைகள் மீது அந்த ஆதரித்து வாதிடல் ஏற்படுத்தும் தாக்கங்கள் என்பன தொடர்பில் இந்தியா மற்றும் பங்களாதேசை சேர்ந்த சட்டத்தரணிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் பாலியல் தொழிலாளர் செயற்பாட்டாளர்கள் பகிர்ந்து கொள்ளவுள்ளனர். அவர்களின் ஆதரித்து வாதிடல் மற்றும் இயக்கத்தை கட்டியெழுப்பல் செயற்பாடுகளில் சட்டத்தின் மையத்தன்மை பற்றிய கேள்விகளை எழுப்பவும் தெற்காசியா முழுவதும் காணப்படும் பல்வகைத்தன்மை மிக்க அனுபவங்களில் இருந்து கற்கவும் பங்கேற்பாளர்கள் ஊக்குவிக்கப் படுகின்றனர். பாலியல் தொழிலாளர்கள் சட்ட நடவடிக்கைகள் பற்றி அல்லது நீதிமன்றங்களுக்கு வெளியே தமது உரிமைகளுக்காக ஆதரித்து வாதிடல் பற்றி ஆராய்ந்துள்ளனரா, அவ்வாறாயின் எவ்வாறு ஆராய்ந்துள்ளனர் என்பது பற்றி கலந்துரையாடுவதற்கான தளத்தையும் இக்கலந்துரையாடல் வழங்கும்.

*இடம்:* பன்யான் மண்டபம்

*இலகுபடுத்துனர்:*
**ட்ரிப்தி டான்டொன், இந்தியா**
புது டெல்லியை தளமாகக் கொண்ட இவர் இந்தியாவின் மிகவும் பழமை வாய்ந்த மனித உரிமைகள் நிறுவனங்களில் ஒன்றான லாயர்ஸ் கலக்டிவ் அமைப்பின் பிரதிப் பணிப்பாளருமாவார்.

*பேச்சாளர்கள்:*
**ரமா தேப்னாத், இந்தியா**

இவர் பசிரஹ்த் தர்பார் சமித்தி அமைப்பின் இலக்குவைக்கப்பட்ட இடையீடு நிகழ்ச்சித்திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் ஆவார்; தர்பார் மஹிலா சாமான்வயா குழுவின் தலைவராக இவர் சேவையாற்றியுள்ளார்.

**சிப்ரா கோஸ்வாமி, பங்களாதேஸ்**
பங்களாதேஸ் சட்ட உதவி மற்றும் சேவைகள் நம்பிக்கை நிதியத்தின் (BLAST) ஃபரீதாபூர் அலகுடன் பணி புரியும் ஒரு சட்டத்தரணி இவராவார்.

**ஜோயா சிக்தேர், பங்களாதேஸ்**

**ராச்சனா முத்ராபோயினா, இந்தியா**
ட்ரான்ஸ்ஜென்டர் பிரச்சினைகள் தொடர்பான இந்தியாவின் முதலாவது யூ டியூப் அலைவரிசையான ட்ரான்ஸ்விசன் இன் ஸ்தாபகர் அதே போன்று, தெலுங்கானா ஹிஜ்ரா இன்டர்செக்ஸ் சமித்தியின் ஸ்தாபக உறுப்பினர்; தற்போது ஒரு ட்ரான்ஸ்ஜென்டர் சிகிச்சை நிலையத்தில் ஒரு ட்ரான்ஸ் ஆரோக்கிய நிபுணராக பணியாற்றி வருகின்றார்.

**பாரதி டே, இந்தியா**
தெற்காசியாவின் மிகப் பெரிய மற்றும் முதன்முதலாக உருவாக்கப்பட்ட பாலியல் தொழிலாளர் தலைமை தாங்கும் நிதியியல் அமைப்பான உஷா கோப்பரேட்டிவ் இன் உறுப்பினர்; அனைத்திந்திய பாலியல் தொழிலாளர் வலையமைப்பின் (AINSW) அடிப்படைக் குழு உறுப்பினர்; பாலியல் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சட்டப் பிரச்சினைகளை ஆராய மீயுயர் நீதிமன்றத்தினால் அமைக்கப்பட்ட குழுவில் பணியாற்றியவர்.

**<u>வட்டமேசை 5: மனிதக்கடத்தலுக்கு எதிர்ப்பு: தற்போது கதை என்ன?</u>**
பாலியல் தொழிலில் மக்கள் ஈடுபடுவதற்கு பல காரணங்கள் உள்ளன - தெரிவு, சூழ்நிலை மற்றும் பலவந்தப்படுத்தல். பாலியல் தொழிலுக்கு மக்கள் பலவந்தப்படுத்தப்படுவதை தடுக்க சிறந்த மூலோபாபாயமாக மனிதக் கடத்தலுக்கு எதிரான குற்றவியல் சட்டங்கள் காணப்படுகின்றன. பெண்களின் உரிமைகளுக்கான அங்கீகாரம் அல்லது/அத்துடன் கொடுக்கல் வாங்கல் கொண்ட பாலியலை தேர்வு செய்யும் இயலுமை தொடர்பில் பெண்கள் உரிமைகள் செயற்பாட்டாளர்கள் ஒரு முரண்பாடு மிக்க உறவைக் கொண்டிருந்தனர். பெரும்பாலும் வன்முறை மொழியில் பேசப்படும் இவ்விடயம், பாலியல் தொழிலில் ஈடுபடும் அனைத்து பெண்களும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சுரண்டலுக்கு உள்ளானவர்கள் என்ற கதையை வடிவமைக்க உதவியது. இதனுடன் சேர்ந்து, பாலியல் வேலையை கடத்தலுடன் இணைக்கும் ஒரு கதையைத் தள்ளும் மிகவும் செல்வாக்கு மிக்க கடத்தல் எதிர்ப்புத் துறையின் தோற்றம் உள்ளது. இந்த விவாதங்கள் மற்றும் பிழைக் கோடுகள் பாலியல் தொழிலாளர் உரிமைகள் இயக்கத்தின் போராட்டங்களின் மையப்பகுதியில் உள்ளன.

*இடம்:* ஷிவாபூரி மண்டபம்

*இலகுபடுத்துனர்:*
**மோனா மிஷ்ரா, இந்தியா**
1995 ஆம் ஆண்டு இந்தியாவில் HIV இனால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஆதரவளிக்கும் முதலாவது குழுவை மோனா மற்றும் அவரின் மறைந்த கணவர் ஆகியோர் ஆரம்பித்தனர்; இந்தியாவில் பாலியல் தொழிலாளர் இயக்கத்தின் ஒரு நீண்ட கால நேச அணி உறுப்பினராக இவர் உள்ளார்.

*பேச்சாளர்கள்:*

**ஹசீப் ராத்தோர், பாகிஸ்தான்**
லாஹூரின் ஹேவ் ஒன்லி பொசிட்டிவ் எக்ஸ்பெக்டேசன் (HOPE) இணைந்துள்ளார்; மனித உரிமைகள் பற்றி தீவிரமாக ஆதரித்து வாதிடுபவர், இவரின் பணிகள் பால்நிலை மற்றும் பாலியல் சிறுபான்மைகளுக்கு உள்வாங்கல் மற்றும் சமத்துவம் என்பவற்றை ஏற்படுத்த பாடுபடுவனவாக உள்ளன.

**ஷோவா டங்கோல், நேபாளம்**

**ஜஹானரா காஹ்தூன், பங்களாதேஸ்**
பங்களாதேஸில் பாலியல் தொழிலாளர் இயக்கத்தை வலுப்படுத்தும் நாரிபொக்ஹோ இடையீட்டுடன் இணைந்துள்ளார்.

**பாக்யா லக்ஷ்மி, இந்தியா**
இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் 6,000 இற்கும் மேற்பட்ட ஒரு பாலியல் தொழிலாளர் ஒன்றியமான அஷோதயா சமித்தியின் உறுப்பினர்; அனைத்திந்திய பாலியல் தொழிலாளர் வலையமைப்பின் (AINSW). அடிப்படைக் குழு உறுப்பினர்.

**SWASA**
தெற்காசியாவின் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் கூட்டணிகள் என்பது பங்களாதேஸ், இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கையில் உள்ள பாலியல் தொழிலாளர்கள், ஆதரவு செயற்பாட்டாளர்கள் மற்றும் நிறுவனங்களின் இடையான ஒரு ஒத்துழைப்பு முயற்சியாகும். இந்த முன்னெடுப்பு தானாகவே LGBTQI மற்றும் பெண்கள் உரிமைகள் இயக்கங்கள் அத்துடன் ஓரங்கட்டப்பட்ட மக்களின் ஏனைய போராட்டங்களுடன் ஒத்திசைவானதாக அமைகின்றது அத்துடன் பிராந்தியத்தில் உள்ள பாலியல் தொழிலாளர்களின் மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது.

## தளங்கள்

**ஃபோட்டோ ஸ்டூடியோ**

*அனிதா க்ஹேம்கா*

புகைப்படப்பிடிப்பாளரின் குறிப்பு: “பாலியல் தொழிலாளர்கள் பற்றிய எனது முந்தைய ஆவணப்படுத்தல் பாலியல் தொழிலை ஒரு சுரண்டல் மிக்க துறையாகக் காணப்படுவதற்குரிய ஒரு பதிலாக அமைந்திருந்தது. அவர்களின் ஆரோக்கியம் மற்றும் உடலியல் பாதுகாப்பு, பொருளாதாரச் சுரண்டல் அத்துடன் அவர்களின் வாழும் மற்றும் பணிபுரியும் நிலைகளுடன் தொடர்புடைய பிரச்சினைகளை அது நோக்கியது. ஒப்புதல் மறைவானதாகவும் அங்கு காணப்பட்ட நோக்கம் அவர்களுக்கு கௌரவத்தை வழங்குதல் அத்துடன் அந்நேரத்தில் காணப்பட்ட மேலாதிக்கம் மிக்க பார்வையை தவிர்ப்பதுமாகக் காணப்பட்டது.

ஃபோட்டோ ஸ்டூடியோ நிகழ்வில், எடுக்கப்படும் போர்ட்ரெயிட் (உருவப்படங்கள்) புகைப்படங்கள் ஒத்துழைப்புடன் எடுக்கப்படுவது இங்குள்ள அணுகுமுறையாகக் காணப்படுகின்றது. புகைப்பட த்தில் தோன்றவுள்ள ஒவ்வொரு நபருக்கும், உரிய ‘தருணத்தில்’ வலிமை, சமநிலை மற்றும் அபிலாஷையை கண்டறிந்து பாலியல் தொழில் என்பதற்கும் அப்பால் அவர்களின் ஆளுமையைக் காண்பதே இங்குள்ள அணுகுமுறையாக அமையவுள்ளது. ஒவ்வொரு தனி நபரும் தமது சொந்த செயற் திறனை வழிப்படுத்தும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட உருவப்படமாக இதன் அடைவுகள் வெளிப்படும்.”

*இடம்: வாகன தரிப்பிடத்துக்கு அண்மையில்*

**ஃபோட்டோ பூத்**

அடுத்த பக்கத்தில் நாம் இருப்பது எவ்வாறான உணர்வை எமக்கு ஏற்படுத்தும்? பொலிஸ்காரர் ஒருவரின் தடியடிப் பிரயோகத்தை நாம் நடத்துவது எவ்வாறான உணர்வை வழங்கும்? ஒரு நீதிபதியின் அங்கியை அணிவது எவ்வாறான உணர்வை எமக்கு வழங்கும்? அதிகாரத்தை எம் கைகளில் வைத்திருப்பது எவ்வாறான உணர்வை வழங்கும்? வாருங்கள், வந்து அறிந்து கொள்ளுங்கள்!

அதிகாரத்தினை கையில் எடுக்க, உங்களின் இதயத்தின் உள்ளடக்கத்துக்கு தோன்றி அதனை வீட்டுக்கு எடுத்துச் செல்லக் கூடிய தனித்துவம் மிக்க வகிபாக மாற்றத்தைக் காண்பிக்கும் புகைப்படச் சான்றாக ஆக்கிக்கொள்ளுங்கள். நீங்கள் விரும்பும் வகிபாகத்தில் எமது புகைப்படப்பிடிப்பாளர் உங்களை புகைப்படம் எடுப்பதுடன் அப்புகைப்படத்தை சிறிது நேரத்தில் உங்களுக்கு வழங்குவார்.

*இடம்: கேஸ்போ*

**SWASA கிராமம்**

தெற்காசியாவின் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் கூட்டணிகள் (SWASA) என்பது பாலியல் சேவைகளை வழங்கும் பாலியல் தொழிலாளர்கள் பாலியல் தொழில் மற்றும் பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு ஆதரவு வழங்கும் முன்னணி இயக்கங்களின் செயற்பாட்டாளர்களின் பிராந்திய வலையமைப்பாகும்.

தெற்காசியாவில் அடிமட்டத்தில் பாலியல் உரிமைகள் தொடர்பில் பணிபுரியும் செயற்பாட்டாளர்கள் சந்திக்க, பேச மற்றும் நிலைத்து நிற்கும் பரஸ்பர இணைப்புகளை உருவாக்கும் ஒரு தளமாக SWASA கிராமம் அமைக்கப்படவுள்ளது. பங்காளர்கள் ஒருவருடன் ஒருவர் பேச மற்றும் ஊடாடல்களை மேற்கொள்ளக் கூடிய இயங்குநிலை மிக்க தளமாக இக்கிராமம் அமையவுள்ளதுடன் ஏனைய

நாடுகளில் இருந்து வருகை தந்துள்ளவர்களும் அங்கு விஜயம் செய்து கற்றுக்கொள்ள மற்றும் தமது சொந்த அனுபவங்களை பகிர்ந்துகொள்ள முடியும். மாநாட்டில் கலந்து கொள்ளும் தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள எமது பங்காளர்கள் நிபுணர் கலந்துரையாடல்கள், காட்சிப்படுத்தல்கள், எடுத்துக் காட்டுதல்கள், கதை சொல்லல் போன்ற விடயங்களுக்கு இத்தளத்தை சுதந்திரமாக பயன்படுத்தலாம். தெற்காசியாவில் உள்ள பங்காளர்களால் இத்தளம் வடிவமைக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு நாளும் வேறுபட்ட கருப்பொருள் ஒன்றை கிராமத்தில் உள்ள SWASA Adda கொண்டிருக்கும்:

| | |
|---|---|
| நாள் 1: சமர்ப்பிப்புகளின் நதி | (பி.ப 02:30 - 04:30) |
| நாள் 2: பாலியல் தொழில் பல்கலைக்கழகம் | (பி.ப 02:30 - 04:00) |
| நாள் 3: இயக்கங்களின் மத்தியில் | (பி.ப 02:30 - 04:30) |

ஒரு முழு நாள் மண்டி (சந்தை) அத்துடன் வில்லேஜ் பிளாஸா என்பன மாநாட்டின் அனைத்து நாட்களிலும் இடம்பெறவுள்ளன.

*இடம்:* ஆர்போர்ட்டம் தோட்டம்

**Art (கலை) + Activism (செயற்பாடு) = Artivism**

கலை எம்மை மகிழ்விக்கின்றது, தொந்தரவுக்கு உள்ளாக்குகின்றது, எம்மை ஈடுபாடு கொள்ளச் செய்கின்றது, அத்துடன் எம்மை நகர்த்துகின்றது. சமூக மாற்றத்துக்காக மனநிலைகளில் மாற்றத்தினை ஏற்படுத்த செயற்பாடு முயற்சிக்கின்றது. இந்த இரண்டையும் நோக்கத்துடன், மனதில் நிலைநிறுத்தி நடைமுறை ரீதியாக கலக்கும் போது வலுவான உந்துசக்தியளிக்கும் ஒரு கருவி உருவாகும் - அது Artivism என அழைக்கப்படுகின்றது. இந்த பதம் இணைக்கப்படும் முன்னரே பாலியல் தொழிலாளர்கள் இதனை நடைமுறப்படுத்தியுள்ளனர்! தமது அடையாளம் மற்றும் உரிமைகள் தொடர்பில் மக்களின் கருத்தியலில் செல்வாக்கு செலுத்தவும் தமது சொந்தக் கதைகூறல்களை வடிவமைக்கவும் அவர்கள் பல வகைகளில் அமைந்த கலை மற்றும் கலாச்சார ஊடகங்களை அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

அந்த வலுவான வெளிப்படுத்தலை கொண்டாடும் வகையில், Art + Activism தளம் பாலியல் தொழிலாளர்கள் தலைமையில் ஆரம்ப காலத்தில் மேற்கொண்ட சில செயற்பாடுகளைக் காண்பிக்கின்றது. மேலும், சமூக உறுப்பினர்கள் மற்றும் கூட்டணி அங்கத்தவர்கள் அந்த பணியில் பங்களிப்பு வழங்கும் வாய்ப்பையும் வழங்குகின்றது - பங்கேற்பாளர்கள் வழங்கப்படும் பொருட்களை பயன்படுத்தி தமது சொந்த கலை வடிவம், போஸ்டர்கள், அல்லது சின்னங்களை உருவாக்கலாம். இங்கு உருவாக்கப்படும் செயற்பாடு மாநாட்டின் ஏனைய தளங்களில் காண்பிக்கப்படலாம் மற்றும் உள்ளடக்கப்படலாம் - எனவே, உங்களின் கலை வடிவத்தை முன் கொண்டு செல்லுங்கள், ஏனையோருடன் பகிர்வதற்காக அவற்றை அமர்வுகளுக்கு எடுத்துச் செல்லுங்கள், அதனை சமூக ஊடகங்களில் பகிர்ந்து கொள்ளுங்கள் அத்துடன் அதனை புகைப்படம் எடுக்க ஃபோட்டோ பூத்திற்கு எடுத்துச் செல்லுங்கள்.

*நிகழ்வை நடத்துபவர்:* அம்ரா படாதிக், இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் சிறுவர்கள் மற்றும் பாலியல் தொழிலாளர்கள் தாமாகவே தலைமை தாங்கும் ஒரு நிறுவனம் மற்றும் CREA

*இடம்:* பைத்தாக்

**<u>நினைவுச் சின்னத்தில்</u>**

பாலியல் தொழிலாளர்கள், அவர்களின் உரிமைகள், அவர்களின் வாழ்வாதாரம், அவர்களின் கௌரவம் போன்றவற்றுக்கு தீவிர எதிர்ப்பு நிலவும் ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்கின்றோம். எனினும் இந்த ஒன்றுகூடல் எமது பாதுகாப்பு மிக்க பகிரப்படும் தளமாகும் - இங்கு ஒன்று கூடியுள்ளவர்கள் என்ன நடந்தாலும் முன்னேறிச் செல்வர். தெற்காசியாவில் உள்ள பாலியல் தொழிலாளர்களின் தியாகங்கள் மற்றும் துணிவு என்பவற்றில் இருந்து கட்டியெழுப்புவதன் மூலமே நாம அதனை செய்கின்றோம், அவர்கள் ஒன்றிணைதல் மற்றும் பகிரப்படும் தலைமைத்துவம் என்பவற்றின் நிலைமாற்றும் தன்மை மிக்க மாதிரிகள் மூலம் செலுத்தப்படும் ஒரு உன்னதமான இயக்கத்தை உருவாக்கியுள்ளனர்.

நாம் இழந்த உன்னதமான மக்கள் வழங்கிய அனைத்து பங்களிப்புகளையும் இந்த தளம் கௌரவிப்பதுடன் கொண்டாடுகின்றது - தீங்கு மிக்க பெருந்தொற்றின் போது உந்து கோலாக செயற்பட்ட சேவை வழங்குனர்கள்; அநேகமான மக்களை விட பெருந்தொற்றின் தீய விளைவுகளால் மிகவும் நேரடியாக துயருற்றவர்கள்; பிரசித்தமாக வெளியே தெரியாமல் பெயரின்றிக் காணப்பட்ட நிலையிலும் பாடுபட்ட மக்கள்; அவர்களின் பேச்சுப்புலமை மற்றும் பாணியை நாம் வியப்பு மற்றும் நன்றியுடன் நாம் நினைவு கூரும் மக்கள்.

இந்த அசாதாரண தனி நபர்களுக்கு மரியாதை செலுத்த இந்த தளத்தை தயவு செய்து பயன்படுத்துங்கள். உங்களின் நண்பர்கள் மற்றும் பெயர்களை உள்ளடக்குங்கள், அவர்களின் புகைப்படங்களை பகிருங்கள், உங்களின் செய்திகளை எழுதுங்கள். அல்லது உங்களின் நினைவுகளுடன் ஒரு தருணத்தை இங்கு செலவிடுங்கள்.

*இடம்:* தர்பார் கோர்ட்யார்ட்

## களியாட்டங்கள் மற்றும் வேடிக்கைகள்!

**மே 29: பொலிவூட் இரவு (இரவு 09:00 மணி தொடக்கம்)**
உங்களின் அலங்கார உடைகள் மற்றும் குதியுயர்ந்த காலணிகளை அணிந்து நடனம், இசை மற்றும் களிப்பு நிரம்பிய ஒரு இரவில் எம்முடன் இணையுங்கள். உங்களின் விருப்பு மிக்க பாடல்களை DJ இசையுடன் பகிர்வதற்கு கொண்டு வாருங்கள்.

**மே 30: ஃபெஷன் ஷோ (இரவு 09:30 தொடக்கம்)**

ஃபெஷன் ஷோ ஃபெஷன் மற்றும் பொழுது போக்கு மிக்க கவர்ச்சியான இரவாக அமையவுள்ளதுடன், சமத்துவம் மற்றும் நீதிக்காக நாம் அனைவரும் அணிநடை பயிலும் ஒரு நிகழ்வாக அமையும். இது ஒரு உற்சாகமான நிகழ்வாக இருக்கும் என நாம் உங்களுக்கு வாக்குறுதியளிக்கின்றோம், எமது ஸ்வாக் (SWAG) மற்றும் பெருமையை (Strut) வெளியே காண்பிக்கும் வாய்ப்பாக இது எம் அனைவருக்கும் அமையவுள்ளது. உடைகள், அரங்கப் பொருட்கள் (Props) போன்றவற்றைக் கொண்டு வருவதுடன் நளினமாக உடையணிந்து அல்லது நீங்கள் எவ்வாறு உள்ளீர்களோ அவ்வாறு வாருங்கள் - எது சரியென்று நீங்கள் உணர்கின்றீர்களோ அவ்வகையில் அல்லது *நீங்களாக* அங்கு வாருங்கள். நடையரங்கில் நண்பர்களுடன் அல்லது தனியாக, எதை நீங்கள் சிறப்பாக உணர்கின்றீர்களோ அந்த வகையில் நடைபவனி செய்யுங்கள். பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக நடைபவனி செய்ய நாம் அனைவரும் ஒன்றிணைவோம்!

இதில் இணைவதற்கு, உங்களின் அரங்கப் பெயரை வழங்குவதற்கு அத்துடன் நீங்கள் கொண்டு வரும் செய்தியை நிகழ்ச்சி நடத்துனருக்கு தெரியப்படுத்த நாம் உங்களுடன் ஒரு பதிவு செய்தல் தாளை பகிர்ந்து கொள்ளவுள்ளோம். ஏதாவது இசைத் தேவைகள் இருக்குமாயின், அவற்றை சுஷ்மா லுத்ராவுக்கு (CREA) தெரியப்படுத்தவும்.

**மே 31: இசை மற்றும் நடன இரவு (இரவு 09:00 தொடக்கம்)**
மாநாட்டின் இறுதி நாளன்று எமக்கு இசை மற்றும் நடனத்தின் மூலம் புத்துயிர் பெற எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்! இசைக்கான பரிந்துரைகள் அதிகம் வரவேற்கப்படுகின்றன!